சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 165/2019

PW- 4

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | தெய்வேந்திரன் |
| க.பெ. (அ) த.பெ. | ராஜீ |
| வயது | 59 |
| முகவரி | ஆனைமலை |

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது ஆனைமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட Referred charge sheet நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் அது **சா.த.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த தேதியில் நான் ஆனைமலை காவல் நிலையத்தில் பணியில் இல்லை. நான் கோப்பின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். விபத்தானது 22.02.2013 அன்று நடந்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் ஈச்சர் வாகனமான வனத்துறைக்கு சொந்தமான TN 41 G 0068 என்ற ஈச்சர் லாரியானது

ஜான்சா செரிப் மீது மோதி இறந்துவிட்ட நிலையில் எங்களது காவல் நிலையத்தில் குற்ற எண். 52/2013 என்ற எண்ணில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்கண் ட இறுதி அறிக்கையானது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தெரியாது. இந்த வழக்கில் கண்ணுற்ற நபர்ககளின் சாட்சியங்கள் பொறுத்து ஆவணம் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. காவல் துறையினர் வனத்துறைக்கு சாதகமாக இறுதி அறிக்கை refer செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் charge sheet ஆனது ரெப்பர் செய்யப்பட்டது பொறுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கில் கண்ட 1ம் எதிர்மனுதாரர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறுதி அறிக்கை ரெப்பர் செய்யப்பட்ட நிலையில் அது என்ன காரணத்திற்காக செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை பொறுத்து போலிசார் யாரை விசாரித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது மனுதாரர் தரப்பில் தனி புகார் கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காவல் துறையினர் வனத்துறைக்கு சாதகமாக இந்த வழக்கு ரெப்பர் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறுதி அறிக்கை ரெப்பர் செய்ததை பொறுத்துமு தற்போது நீதிமன்றங்களில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. போலிசார் தவறாக விசாரணை செய்து இறுதி அறிக்கையை ரெப்பர் செய்துள்ளார்கள் என்றால் அது சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி